முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல: 01/2013 (i)

எனது இலக்கம்: DMS/Cir/2013/Bonus
முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
பொதுத் திறைசேரி
கொழும்பு 01.
2013.12.09

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கு/
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக
அரசுக்குச் சொந்தமான கம்பனிகளின் தலைவர்களுக்கு

**அரசாங்கத்திற்குச் சொந்தமான கூட்டுத்தாபனங்களினதும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகளினதும் ஊழியர்களுக்கு 2013 ஆம் ஆண்டுக்கான மிகையூதியம் வழங்குதல்**

2013.11.15 ஆந் திகதிய 01/2013 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன் 2013 ஆம் ஆண்டுக்கான மிகையூதியங்களைப் பின்வருமாறு செலுத்த முடியும்.

1. **மிகையூதியம் வழங்குதல்**

அரச கூட்டுத்தாபனங்களிலும் அரசுக்குச் சொந்தமான கம்பனிகளிலும் பணிபுரியும் ஊழியர்களுக்கு 2013 ஆம் ஆண்டுக்கான மிகையூதியங்களை கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு செலுத்துவதற்கு 2013.10.31 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

| நிறுவன வகை | உத்தேச ஊக்குவிப்பு கொடுப்பனவு |
|---|---|
| குறித்த நிதியாண்டில் இலாபமீட்டியிருப்பினும் வேறு ஊக்குவிப்புக்கள் செலுத்தப்படாத அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகள் | ரூபா12,500/- |
| தினவரவு மற்றும் செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்பு அல்லது வேறு ஏதேனும் ஊக்குவிப்புக்கள் செலுத்தப்படுமாயின், அத்தகைய இலாபமீட்டும் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகள் | ரூபா.9,500/- |

| | |
|---|---|
| சென்ற வருடத்தை விட <u>நட்டத்தை குறைத்துள்ள</u> அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகள் | ரூபா 2,500/- |
| <u>நட்டத்தில் இயங்கும்</u> அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகள் | ரூபா 1,000/- |

2. முன்னைய நிதியாண்டில் நட்டமடைந்த அரசாங்க கூட்டுத்தாபனங்களிலும் அரசுக்கு முழுமையாகச் சொந்தமான கம்பனிகளிலும் பணிபுரியும் ஊழியர்களுக்கு மிகையூதியம் செலுத்துவதற்கு முன்னர் திறைசேரியின் அனுமதியைப் பெறுதல் வேண்டும். இதற்கான கோரிகைகளை உரிய அமைச்சின் செயலாளரின் சிபாரிசுடன் பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்திடம்/ தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. **பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள்**

3.1 ஏதேனும் ஒரு நிறுவனம் தனது ஊழியர்களுக்கு மிகையூதியமாகக் கருதப்படக்கூடிய ஏதேனும் அரையாண்டுக் கொடுப்பனவைச் செலுத்தியிருப்பின், அக்கொடுப்பனவை மேலதிக மிகையூதியமாகக் கருதுவதற்கு அமைச்சரவையின் விசேட அனுமதி பெறப்பட்டிருந்தாலேயன்றி, அது வருட இறுதியில் வழங்கப்படும் வருடாந்த மிகையூதியத்திற்கான முற்பணமாகக் கருதப்படுதல் வேண்டும்.

3.2 இச்சுற்றறிக்கையின் அடிப்படையில் வருடாந்த மிகையூதியத்தைச் செலுத்துவதற்கு முன்னர் பணிப்பாளர் சபையின் அல்லது நிர்வாக சபையின் அனுமதி பெறப்படுதல் வேண்டும்.

3.3 மேலே குறிப்பிட்டவாறு மிகையூதியங்களைச் செலுத்துவதற்கு குறித்த அரச கூட்டுத்தாபனங்களும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகளும் வருடாந்த அறிக்கைகளை2002.05.24 ஆந் திகதிய பீஎவ்/பீஈ/21 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்திருத்தல் வேண்டும். திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ள பொது தொழில்முயற்சிகளின் சிறந்த நிர்வாகத்திற்கான அறிவுறுத்தல்களும் வழிகாட்டல்களும் உரிய முறையில் பின்பற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

4. **முக்கிய விடயங்கள்**

4.1 மிகையூதியங்களைச் செலுத்துவதற்கான நிதி திறைசேரியினால் வழங்கப்படமாட்டாது.

4.2 கூட்டு ஒப்பந்தங்கள் அல்லது அவற்றையொத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் சம்பளங்களும் கொடுப்பனவுகளும் செலுத்தப்படுகின்ற கூட்டுத்தாபனங்களுக்கும் அரசுக்குச் சொந்தமான கம்பனிகளுக்கும் இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகமாட்டாது.

4.3 இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்குப் புறம்பாக ஏதேனும் மிகையூதியங்களைச் செலுத்துவதாயின், அதற்கு அமைச்சரவையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். எவ்வாறாயினும், அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டுக்கான மிகையூதியம் செலுத்தப்பட்டிருந்தால் அதன் அடிப்படையில் இவ்வருடத்திலும் மிகையூதியங்களைச் செலுத்த முடியும்.

4.4 ஒவ்வொரு நிறுவனமும் மிகையூதியத்தைச் செலுத்துவதற்கு கடந்த வருடத்தில் பின்பற்றிய நிர்வாக நடைமுறைகளின் அடிப்படையில் இவ்வருடத்திலும் மிகையூதியங்களைச் செலுத்த முடியும்.

4.5 மிகையூதியக் கொடுப்பனவுகள் செலுத்தப்படுகின்ற அனைத்துக் கூட்டுத் தாபனங்களும், சபைகளும் கம்பனிகளும் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், பணிக்கொடை மற்றும் உழைக்கும் போது செலுத்தும் வரிக் கொடுப்பனவுகள் ஆகிய அனைத்தையும் உரிய சட்டங்களுக்கு இணங்கச் செலுத்துவதற்குத் தலைவர்களும் பணிப்பாளர் சபைகளும் பிரதம நிறைவேற்று அதிகாரிகளும் பொறுப்புடையவர்களாவர். அதனால் மிகையூதியக் கொடுப்பனவுக்குப் பணிப்பாளர் சபையிடம் அனுமதி கோருகின்ற சந்தர்ப்பத்தில் உள்ள நிலைமை தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதும் அவர்களது பொறுப்பாகும்.

5. விளக்கங்கள்

இச்சுற்றறிக்கை தொடர்பில் ஏதேனும் விளக்கங்கள் அவசியம் எனின் முகாமைத்து சேவைகள் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுமாறு தயவாய் வேண்டிக் கொள்கின்றேன்.

ஒப்பம் / பீ.பி.ஜயசுந்தர
திறைசேரியின் செயலாளர் மற்றும்
நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர்

<u>பிரதிகள்</u>

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. இணைத் தலைவர், தேசிய சம்பள ஆணைக்குழு
6. பணிப்பாளர் நாயகம், பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்
7. பணிப்பாளர் நாயகம், வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்